# பெண்ணிய எழுத்தாளர்களில் சு.தமிழ்ச்செல்வியின் படைப்பாளுமை

## (கீதாரி யை முன் வைத்து)

17

**முனைவர் இரா.ஜீவாராணி**
**உதவிப் பேராசிரியர்**
**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி**
jeevarani2408@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சு.தமிழ்ச்செல்வி அவர்கள் இடையர்களின் பேச்சு மொழியையே தம் படைப்பிற்குப் பயன்படுத்தி, கீதாரி  இன மக்கள் நிலையான இருப்பிடம் இல்லாமல் வாழிடம் சார்ந்து கூண்டோ, வளசையையோ அமைத்துக் கொண்டு நாடோடி போன்ற வாழ்க்கையினை வாழ்ந்தனர் என்பதனையும், அவர்கள் மனத்தின் வெளிப்பாடுகளைப் பழமொழிகள், தொழில்முறைகள், வழக்காற்றுக் கதையாடல்கள் மூலமும் ஆசிாரி யர் வெளிப்படுத்தியுள்ளார் என்பதனையும் அறிவதாக இக்கட்டுரை அமகிறது.

**முன்னுரை**

சு.தமிழ்ச்செல்வி அவர்கள் கீதாரி  என்னும் நாவலில் தனக்குத் தொரி ந்த, நன்கு பாரி ட்சயமான இடங்களையே தேர்வு செய்து கதைக் களத்தினை அமைத்துள்ளார். கீதாரி  என்ற நாவலில் கற்பகநாதர் குளம், ஆறுகாட்டுத்துறை, விருத்தாச்சலம், மேமங்களம், ஆதனூர், கோயில்தாழ்வு ஆகிங அறிந்த இடங்களையே தேர்வு செய்துள்ளார். ”வளவனாற்றின் மேற்கே வடிவாய்க்கால் கோட்டகத்தில் கிடை போட்டிருந்தார்கள். கரையாங்காட்டு ஆளொருவனின் கொல்லையில் நான்கைந்து நாட்களாய் கிடைகட்டி வந்தார்கள்” (கீதாரி , ப.11) என்ற கூற்றின் வாயிலாக, ஊர்ப்பெயர்கள், இடங்கள் தெளிவாக இடம்பெற்றிருப்பதன் மூலம் படைப்பாளிக்கு நன்கு அறிமுகமான இடங்களே புதினங்களில் இடம்பெற்றுள்ளன என்பதன் வாயிலாக சு.தமிழ்ச்செல்வியின் படைப்பாளுமையை அறிந்து கொள்ள முடிகிறது.

**படைப்பாளுமை – விளக்கம்**

படைப்பாற்றல் என்பது எல்லா மனிதர்களிடத்தும் காணப்படுகின்ற பொதுமைப் பண்பு அல்ல. அது ஒரு சிலாரி டம் மட்டுமே காணப்படுகின்ற தனிப் பண்பு ஆகும். அதிலும் நாவல், சிறுகதை, கவிதை போன்ற படைப்புகளைப் படைக்கும் ஆற்றல் ஒரு சிலாரி டம் மட்டுமே காணப்படுகின்ற பண்பு ஆகும். படைப்பாளியின் ஆளுமைத் திறனை, அவனது படைப்பில் படைக்கப்பட்டுள்ள கதாபாத்திரங்களின் தான் என்ற உணர்வு, சுயம், ஆளுமை பற்றி விளக்கப்படும் விதத்தின் வாயிலாகக் காணலாம். இத்தகைய வரையறைகளை உள்வாங்கிக் கொண்டு சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகள், அவர் இலக்கியத்தின் மீது கொண்டுள்ள ஆர்வம், சமூகம் சார்ந்த கருத்துக்கள், தாக்கங்கள் ஆகியவற்றின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**நாடோடி வாழ்க்கை**

இடையர் இனத்தைச் சார்ந்த கீதாரி  இன மக்களின் சொந்த ஊர் மேமங்கலம் என்ற ஊர். என்னதான் சொந்த ஊராக இருந்தாலும் தொழில்முறை சார்ந்து புலம்பெயர் வாழ்க்கையையே மேற்கொள்கின்றனர். மாவட்டங்கள் விட்டு மாவட்டங்களுக்கும் மாவட்டத்திலே ஊர்விட்டு

ஊர்களுக்கும் சென்று நிலையான இருப்பிடம் இல்லாமல் வாழிடம் சார்ந்து கூண்டோ, வளசையையோ அமைத்துக் கொண்டு நாடோடி போன்ற வாழ்க்கையினை வாழ்கின்றனர். இதனை,

ஆடுகளை மேய்க்கவும் பட்டி போடவும் இடமில்லாமல் போய்விடும்" (பக்.30)

ஊர் ஊராய் ஆட்டோடு திரிந்து பிழைப்பு நடத்தும் கீதாரி கூட்டத்தினர்" (பக்.40)

என்ற கூற்றின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**பழமொழிகள்**

கீதாரி நாவலில் சாதியம் குறித்தப் பழமொழிகளும் வாழ்க்கை குறித்தப் பழமொழிகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இத்தகைய பழமொழிகள் மக்களின் மனத்தின் வெளிப்பாடுகளாகவும் அமைந்திருப்பதனைக் காண முடிகிறது.

"பண்பாட்டுப் பழமையிலிருந்து வரும் பழமொழியின் குரல் மரபின் அடிப்படையில் உண்மையைப் பேசுகிறது. பழமொழியைப் பயன்படுத்துபவர் ஒரு கருவியாக இருந்து அவர் வழியாகப் பழமொழி, கேட்போருக்குக் கருத்துப் புலப்படுத்தம் செய்கிறது"[1] என்கிறார் தே.லூர்து அவர்கள். பல்வேறு மேலைநாடுகளும் பழமொழிகளைப் பயன்படுத்துகின்றன.

"ருசி பாத்து திங்க நெனக்கிறவனும் கூரபாத்து குந்த நெனக்கிறவனு எடயனாயிருக்க மாட்டான்ல" (கீதாரி , ப.119)

"பரியாரி குப்பய நோண்டுனா வெறும் மசுராத்தேன் வரும். (ப.132)

"கெஞ்சுனா மிஞ்சுவானுக மிஞ்சுனா கெஞ்சுவானுக"(ப.132)

"பொழுதோட தூங்குறவனுக்கு பொண்டாட்டி இல்ல. விடிஞ்சி தூங்குறவனுக்கு வெள்ளாம இல்லங்குறது எவ்வளவு உண்மையாருக்கு (ப.37)

"வித்தாடு அருகும் செத்தோடு பலுக்கும்"(ப.144)

"விடியா மூஞ்சி வேலைக்கு போனோ வேல கிடைச்சாலும்
கூலி கிடைக்காது" (ப.148)

"அத்திகுளத்துல தண்ணி, ஆலங்காட்டுல வெறவு, நெல்லு வயத்துல அரிசி, ரெண்டு பொண்டாட்டிக்காரன் வூட்டுலருக்கு நெருப்பு"

இவ்வாறு நாவல் முழுக்கத் தங்கள் சாதியம் குறித்த பழமொழிகளும் வாழ்க்கை குறித்தப் பழமொழிகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளதன் வாயிலாக, இடையர் இன மக்களின் மனத்தினை அறிந்து கொள்ள முடிகிறது.

**நாட்டுப்புறப் பாடல்களும் கதையாடல்களும்**

தமிழில் கிடைக்கும் மிகத் தொன்மையான எழுத்துச்சான்று தொல்காப்பியமாகும். தொல்காப்பியர் வாய்மொழி இலக்கியங்களுக்கும் இலக்கணம் கூறியுள்ளார். அதில் நாட்டுப்புறப் பாடல்களை 'பண்ணத்தி' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார் என்று அறிஞர்கள் சுட்டுகின்றனர்.

"பொரி ய பொரி ச்சுவச்சி – நீ
பொழுதிருக்க செத்திருந்தா

பொரி ய தின்னுப்புட்டு – நா
போதரவா மாரடிப்பேன்

அவுல இடிச்சி வச்சி – நீ
அந்திசாய செத்திருந்தா

அவுல தின்னுப்புட்டு – நா

ஆதரவா மாரடிப்பேன் (கீ. ப.87, 88)

என்ற நாடடுப்புறப்பாடலும், இடையர் சமூகத்தின் தொழில்முறை குறித்த நாட்டார் வழக்காற்றுக் கதையாடல்என்றும் இந்நாவலில் இடம்பெற்றுள்ளது. இக்கதையாடலானது இடையர்கள் ஆடுமேய்த்து நாடோடிகளாகப் பிழைப்பதற்கான வழக்காற்றுக் கதையாடல் முன் வைக்கிறது.

“மழைபெய்து வெள்ளம் வர ஆரம்பிக்கும் போது ஓர் ஆட்டுக்காரன் மட்டும் தனியாக காட்டிற்குள் தங்கியிருந்தான். ஆட்டிற்குத் தண்ணீரிலேயே கிடையைப் போட்டு வேலியில் படர்ந்து இருந்த பிரண்டை கொடிகளை எடுத்து மெத்தையாக விரித்துக் கொண்டான் தென்னைக்கீற்றால் பின்னிய கீற்றை மேலே வைத்துச் சுகமாகத் தூங்கியிருக்கிறான். அவ்வாறு தூங்கும்போது என்ன சுகமாக இருக்கிறது. தன் மனத்திற்குள் நினைத ;துக் கொண்டான். இந்த சுகமானது ஆண்டவனுக்குக் கூட கிடைத்திருக்காது என ;று எண்ணும்போது பார்வதியும் பரமசிவமும் படி அளப்பதற்காக வரும்போது அவன் கூறியதை கேட்ட இவர்கள் நம்மைவிட நன்றாக இருக்கும் ஒருவனுக்கு நம்மால் என்னசெய்ய முடியும் என்று எண்ணி அவனைப் பார்க்காமல் நீ இப்படியே இரு என்று வரம் கொடுத்தார்களாம். அதனால் தான் ஆடு மேய்ப்பவர்கள் இன்னும் மழையிலும் தண்ணீரிலும் இருந்து வேதனைப்படுகிறார்கள் என்று காரி ச்சாவின் கூற்றின் வாயிலாக அறிய முடிகிறது. (பக்.104)

இதன் வாயிலாக, ஆடு மேய்ப்பவர்களின் வாழ்வானது பழைய மரபுபோல் அன்று முதல் இன்று வரை நடோடிகளாகவே தன் பிழைப்பை நடத்தி வருகின்றனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும், தொழில் செய்யும் போது பாடப்படும் பாடல்கள் தொழிற்பாடல்கள். வேளாண்மைத் தொழிலும் வேளாண்மை அல்லாத தொழிலும் இத்தொழில் பாடல்களில் அடங்கும். கீதாரி நாவலில் ஆடு மேய்க்கும் இடையர்கள் இரவில் ஆடுகளை வயலில் கிடை போடுகையில் ஆடுகளின் காவலுக்காகத் தூங்காமல் இருப்பர். அப்பொழுது பொழுதுபோக்கிற்காகவும் இரவில் தூங்காமல் இருப்பதற்காகவும் பாடல் பாடினர்.

சந்திரரே சூாரி யரே
சாதிப் பகவானே
இந்திரர நோக்கியல்லோ
எடுத்தனதே சிறுதெம்மாங்கே….“

என்ற பாடலும், சற்று தொலைவில் இன்னொருவர் பாடுகின்ற பாடலும் ராமு கீதாரி யின் காதில் விழுந்ததால் அவன் தூங்காது தன் கிடைக்குக் காவல் இருந்தான்.

பாட்டுக்கும் பாட்டெடுப்பேன் - ஒம்
பாட்டனையும் தோக்கடிப்பேன்
எதிர்பாட்டு படிக்கலேன்னா
ஏணிவச்சி பல்லொடொப்பேன் (கீதாரி , ப.118)

என்று தொழில் பாடல் பாடும் போது அதற்கு எதிர்ப்பாட்டும் பாடியதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**மொழிப் பயன்பாடு**

சு.தமிழ்ச்செல்வி அவர்கள் தனது படைப்புகள் அனைத்திலும் பேச்சு வழக்கினையே தம் மொழிநடையாகக் கையாண்டுள்ளார். கீதாரி என்னும் நாவலிலும் இடையர்களின் பேச்சு

மொழியையே தம் படைப்பிற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். கீதாரி நாவலின் தொடக்கத்திலேயே இடையர்கள் பேசுகின்ற பேச்சினையே அதுவும் ஒலிக்குறிப்புச் சொற்களான, ”ச்சூ…… ச்சூ….த்தே….த்தே… (கீதாரி , ப.9) என்று ஆடு மேய்க்கும் தொழிலினை மையப்படுத்தியே தனது தொழில் சார்ந்த பேச்சு வழக்கினையே கையாண்டுள்ளார்.

**பழக்கவழக்கம்**

ஒவ்வொரு சமூகத்திலும் ஒவ்வொரு விதமான பழக்கங்களைக் காலம் காலமாய்ப் பின்பற்றி வருவர். அதுவே காலப்போக்கில் வழக்கமாக மாறிவிடும். இந்நாவலில்,

- ஆடு இல்லாத இடையர்கள் ஆடு வைத்திருப்பவர்களிடம் வாடகைக்கு (ஓராண்டிற்குப் பிறகு ஓர் ஆட்டிற்கு இரண்டு ஆடாகத் திருப்பித் தருவதாகக் கூறி) வாங்கி அதன் புழுக்கைகளை விற்று பிழைப்பை நடத்துகின்றனர். இவற்றைத் தவிர வேறு தொழில் செய்வதில்லை. கேட்டாலும் தெரியாது என்பது மாதிரியான விடைகள்தாம் வரும். இவர்கள் தொழில் ரீதியாக நிலவுடைமைச் சமூகத்தினரை அண்டி ஆதரவுச் சமூகமாகத் தங்களுடைய வாழ்வை முன்நகர்த்தக் கூடியவர்களாக உள்ளனர்.
- பொங்கல் தினத்தன்று ஆடுகளுக்கு அலங்காரம் செய்து, ஆண் ஆடுகள் பெண் ஆடுகள் என்று தனித்தனியாகப் பாகுபடுத்தி, அதன் பின் தளுவை போடும் இடத்தில் தெப்பம் கட்டுவர். அதன் பின் ஆட்டுக்குட்டியின் காதினை அறுத்து ஆடுகளுக்குரி ய சடங்கினைச் செய்து முடிப்பர்.
- திருமண முறையைப் பார்க்கும் போது திருமணம் செய்துகொள்ளும் ஆண்கள் மற்றும் பெண்களின் சம்மதத்தினைப் பதிவு செய்யவில்லை. சித்தப்பா முறையில் திருமணம் செய்துகொள்ளுதல் (ப-98), அண்ணன் இறந்தால் அவன் மனைவியைத் தம்பி திருமணம் செய்துகொள்ளும் முறையும் காணப்படுகின்றன.
- திருமணச் சடங்கில் மாப்பிள்ளைக்குப் பதிலாக அவன் ஆடு மேய்த்த தடிக்கம்பை வைத்து திருமணம் செய்யும் போக்கையும் (ப-101) திருமணத்திற்குச் சீதனமாக ஆடுகளும் (ப-52) பாத்திரப் பண்டங்களுடன் மாளிகை சாமான்களையும் சீதனமாய்க் கொடுப்பதும் ஆட்டுக்கார இடையர்களின் வழக்கமாயிருந்தன என்பதை இந்நாவல் விளக்குகிறது. இப்பழக்கவழக்கங்கள் தனது இனத்திற்கே உரிய, இயற்கையோடு இயைந்து தொழிலையும் வாழ்க்கையையும் ஒன்றாக இணைக்கும் தன்மையைக் காட்டுகிறது.

**உணவு முறை**

உலகில் உள்ள அனைத்து உயிர்களும் வாழ வேண்டுமென்றால் அதற்கு உணவு தான் அடிப்படைத் தேவையான ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர, அவர் தம் உணவுப்பழக்கவழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும். உணவு என்பது ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை, வாழ்நிலத்தின் விளை பொருள், சமூகப் படிநிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமையும் என்கிறார் தொ.பரமசிவம்[2] கீதாரி இன மக்களின் உணவுமுறையைப் பார்க்கும் பொழுது,

- நெல்லரிசி சோறு, குழம்பு, புலம்பெயர் இடத்தில் கிடைக்கக்கூடிய தானிய வகைகள் போன்றவையும் ஆடுகள் இறந்தால் அதன் கறியை வற்றல் போட்டு வைத்துக் கொண்டு உண்பதும், மிளகாய் சாந்து அரைத்து வைத்துக் கொள்வதுமான உணவுமுறைகள்

கூறப்படுகின்றன.

- புழங்கு பொருட்கள் பெரும்பாலும் மண்ணாலான பானை, சட்டிகள், தொழில்முறை நாடோடியாக சார்ந்து அம்மி முதலிய கல்லாலான புழங்கு பொருட்கள் விலக்கப்படுவதையும் இந்நாவல் பதிவு செய்கிறது.
- ஊர் ஊராக அலைந்த திரிந்து வாழ்க்கை நடத்தும் இவர்கள் தினமும் இரண்டு வேலை சோறுதான். “இரவு சுடுசோறு உப்புக் கண்டம் போட்டு வைத்த குழம்பு, காலையில் பழையசோறு அல்லது தெளிவு தண்ணீர் மட்டும் தான் சாப்பிடுகின்றனர். மழைகாலம், வெயில் காலம், பனிகாலம் என்ற அனைத்து பருவங்களிலும் இது தான் இவர்களின் உணவுமுறையாக இருந்துவருகிறது.
- ஆடுகள் இறந்து விட்டால் ஆட்டு இறைச்சியை உப்பு சேர்த்து காயவைத்துக்கொள்வது இவர்களின் வழக்கமாக உள்ளது.
- நெல்லரிசிச் சோறு, குழம்பு, புலம்பெயர் இடத்தில் கிடைக்கக்கூடிய தானிய வகைகள் போன்றவையும் கறி வற்றலுக்கு மிளகாய்ச் சாந்து அரைத்து வைத்துக் கொள்வதுமான உணவுமுறைகள் கூறப்படுகின்றன.
- தாங்கள் தங்கியிருக்கும் வளசைக்கு அருகில் கத்திரிக்காய், மிளகாய், கீரை போன்ற விதைகளை எடுத்துச் சென்று பயிர்செய்து உணவுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

**தொகுப்புரை**

- கீதாரி இன மக்கள் நிலையான இருப்பிடம் இல்லாமல் வாழிடம் சார்ந்து கூண்டோ, வளசையையோ அமைத்துக் கொண்டு நாடோடி போன்ற வாழ்க்கையினை வாழ்கின்றனர்.
- சு.தமிழ்ச்செல்வி அவர்கள் இடையர்களின் பேச்சு மொழியையே தம் படைப்பிற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.
- இந்நாவலில் சாதியம் குறித்தப் பழமொழிகளும் வாழ்க்கை குறித்தப் பழமொழிகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இத்தகைய பழமொழிகள் மக்களின் மனத்தின் வெளிப்பாடுகளாகவும் அமைந்திருப்பதனைக் காண முடிகிறது.
- நாடடுப்புறப்பாடலும், இடையர் சமூகத்தின் தொழில்முறை குறித்த நாட்டார் வழக்காற்றுக் கதையாடல்களும் இந்நாவலில் இடம்பெற்றுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள் (பக்கம் – 210)
2. தொ.பரமசிவம் அறியப்படாத தமிழகம் ப.26

**துணைநூல்பட்டியல்**

1. தமிழ்ச்செல்வி.சு, கீதாரி , நியூ சென்சுரி புக் ஹவுஸ் சென்னை 2010
2. தே.லூர்து – நாட்டார் வழக்கற்றியல் சில அடிப்படைகள் மூன்றாம் பதிப்பு, ஜலை 2008, பாளையங்கோட்டை
3. தொ.பரமசிவம் அறியப்படாத தமிழகம், நற்றிணை பதிப்பகம், சென்னை.